**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,</u>**
**<u>SIRKALI</u>**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**<u>Case No. S.T.C. No.290/2019</u>**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | | Prosecution: | P.W-1 -cross |
| Name | : Balasubramaniyan | Defence | : |
| Father Name | : Kaliyamoorthy | Caste | : |
| Village | : | Taluk | :Sirkali |
| Calling | : | Religion | : |
| Age | : 53/2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 15.09.2021

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

<u>எதிரிதரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் எதிரி மீது ஒரு காசோலை வழக்கும், என் மனைவி எதிரியின் தந்தை மீது ஒரு காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். எதிரியின் தந்தை உத்திராபதி எனக்குதான் பழக்கம் ஆனவர் என்றால் சரிதான். எதரியின் தந்தை உத்திராபதி என்ன தொழீல் செய்து வந்தார் என்றால் செங்கல் சூளை வைத்து இருந்தார். செங்கல் சூளையின் பெயர் தெரியுமா என்றால் அதன் பெயர் அண்ணாபிரிக்ஸ் சேம்பர். எதிரிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞரின் அறிவிப்பிலும், முதல் விசாரணையிலும், எதிரி பிராமிசரி நோட் எழுதி கொடுத்துள்ளாரா என கூறியுள்ளளேனா என்றால் இல்லை. சாட்சி பின்னிட்டு கடன் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளதாக கூறுகிறார். ஆனால் நான் போட்ட வழக்கில் எதிரி கை லெட்டர் மட்டும் எழுதிகொடுத்திருப்பதாக சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை. நான் எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பில் எனது கட்சிக்காரரிடம் தாங்களும் தங்கள் மகன் ராஜேஷ் என்பவரும் சாட்சிகள் முன்னிலையில் ரூ. 5 லட்சத்திற்கான கடன் பத்திரம் எழுதிக்கொடுத்திருப்பதாக சொல்லியுள்ளீர்கள் என்றால் இல்லை. என் மனைவி எதிரியின் தந்தை உத்திராபதியின் மீது எந்த தொகைக்கு வழக்கு தொடுத்துள்ளார் என்றால். ரூ. 5 லட்சத்திற்கான காசோலை வழக்கு தொடுத்துள்ளார். ராஜேஷ் என்பவர் கடன் பத்திரத்தை என்பெயருக்குதான்

எழுதிக்கொடுத்தாரா என்றால் என் பெயருக்கும், என் மனைவியின் பெயருக்கும் சேர்த்து எழுதிக்கொடுத்தார். நான் அனுப்பிய அறிவிப்பு மற்றும் முதன்மை விசாரணையில் எதிரி ரூ. 5 லட்சத்திற்கு கடன் பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்று சொல்லியுள்ளேன் , ஆனால் அந்த கடன் பத்திரத்தை எந்த காரணத்திற்காக எழுதிக்கொடுத்தார் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. எந்தவிதமான மறுபயனும் இல்லாமல் எதிரி பிராமிசரி நோட் எழுதிக்கொடுத்திருப்பதாக நான் சொ'ல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எந்த மறுபயனுக்காக பிராமிசரி நோட் எழுதிக்கொடுத்தார் என்று நான் வழக்கில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். பிராமிசரி நோட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பிராமிசரி நோட்டை இந்த வழக்கில் தாக்கல் செய்யாமல் பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்று சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிராமிசரி நோட் யார் எழுதிக்கொடுத்தது, யார் முன்னிலையில் எழுதப்பட்டது என்ற விபரத்தை வழக்கில் சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. என்னுடைய அறிவிப்பிலோ, நீதிமன்ற முதல் விசாரணையிலோ எதிரி என்னிடம் கடன் வாங்கியதாக நான் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. வழக்கின் காசோலையை யார் எங்கு எப்போது கொடுத்தார்கள் என்றால் ராஜேஷ் என் வீட்டிற்கு வந்து 16.02.2019 ல் காசோலையை கொடுத்தார் . நான் என்னுடைய வழக்கில் காவல் துறையில் எதிரியின் மீது புகார் கொடுத்து அதன்மூலம் காசோலை பெற்றதாக சொல்லிவிட்டு தற்போது எதிரி எனது வீட்டில் காசோலை கொடுத்ததாக மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சீர்காழி காவல் நிலையத்தில் எதற்காக புகார் அளித்தேன் என்றால் எதிரியிடம் அவர் கொடுக்கவேண்டிய பணத்தை கேட்டதற்கு கொடுக்காமல் என்னை மிரட்டினார் அதனால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். சீர்காழீ காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. யார் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் எதிரியின் தந்தை உத்திராபதி மீது புகார் கொடுத்தேன். எதிரியின் மீது சீர்காழீ காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. எதிரியின் மீது சீர்காழி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் காவல்நிலையத்திற்கு வெளியில் பேசி காசோலை பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பில் தானும், தனது மகன் ராஜேஷ் என்பவரும்

என்றும் ராஜேஷின் தந்தை உத்திராபதிக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதாக உள்ளது என்றால் அதுப்பற்றி தெரியாது. வழக்கு காசோலையில் உள்ள கையெழுத்திற்கும், நீதிமன்றத்திலிருந்து சம்மன் சர்வ் செய்யப்பட்டதற்கான Acknowledgement card ல் உள்ள கையெழுத்து வெவ்வேறாக உள்ளது என்றால் சரிதான். அண்ணாபிரிக்ஸ் சேம்பர் எதிரியின் தந்தை உத்திராபதியின் பெயரில் உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றாலும், ஆனால் வழக்கு காசோலை அண்ணாபிரிக்ஸ் சேம்பர் காசோலைதான் என்றால் சரிதான். அண்ணாபிரிக்ஸ் சேம்பருக்கும் ராஜேஷ் என்பவருக்கும் எந்த வித சம்பந்தம் என்று வழக்கிலோ , அறிவிப்பிலோ, முதல் விசாரணையிலோ கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. அண்ணாபிரிக்ஸ் சேம்பரை வழக்கில் ஒரு எதிரியாக சேர்த்துள்ளீர்களா என்றால் சேர்க்கவில்லை. அண்ணாபிரிக்ஸ் சேம்பரை வழக்கில் சேர்க்காமலும், அண்ணாபிரிக்ஸ் சேம்பரின் உரிமையாளர் உத்திராபதியாக இருப்பதாலும், அதற்கு எந்த வித தொடர்பும் இல்லாத எதிரியை இந்த வழக்கில் எதிரியின் தந்தை உத்திராபதிக்கு அழுத்தம் கொடுத்தபதற்காக எதிரியின் மீது வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அண்ணாபிரிக்ஸ் சேம்பரின் புரொபைட்டர் என்ற இடத்தில் கையெழுத்து போடப்பட்டுள்ளது. அந்த புரொபைட் யார் என்று தெரிந்துக்கொண்டீரா என்றால் எதிரி என் வீட்டிற்கு வந்து என் முன்னிலையில் கையெழுத்திட்டு காசோலையை கொடுத்தார் . அதனால் அதை நம்பி நான் எதையும் கேட்கவில்லை. வழக்கிலோ, அறிவிப்பிலோ, முதல் விசாரணையிலோ எதிரி என் வீட்டிற்கு வந்து காசோலையில் கையெழுத்து போட்டு கொடுத்தார் என்று சொ்ல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் வெளிநாட்டில் லேபர் வேலை செய்து வந்தேன். அதற்கு முன்பு திருமுல்லைவாசலில் அருள்ராஜேந்திரன் கடையில் வேலை செய்துள்ளீர்களா என்றால் இல்லை. இந்த வழக்கில் வழக்கு காசோலையில் எதிரியின் காசோலை இல்லை, எதிரியின் கையெழுத்தும் இல்லை என்றால் சரியல்ல. நான் ரு.7 லட்சம் மற்றும் மனைவி ரூ. 5 லட்சம் கொடுத்திருப்பதற்கான வசதி இல்லை என்றால் சரியல்ல. எந்த வகையிலும் எதிரிக்கு சம்பந்தமில்லாத காசோலையை பயன்படுத்தி எதிரியின் மீது பொய்யாக வழக்கு தொடர்ந்துள்ளேன் என்றால் சரியல்ல.